அதிகாரிகள் அந்தப் பொருள்களை வாங்குகின்றபோது பல்வேறு காரணங்களுக்காக தரம் அற்ற பொருள்களை எல்லாம் வாங்கிக் கொண்டு வந்துவிடுகிறார்கள். இன்றைக்கு சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பு அங்காடி மூலமாக ஆவடியிலே 4 கூட்டுறவுக் கடைகள் இருக்கின்றன. அதிலே தரமான பொருள்கள் எல்லாம் கிடைப்பது இல்லை.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிந்தாமணி கூட்டுறவுப் பண்டக சாலையின் மூலமாக விநியோகிக்கப்படுகின்ற பொருள்கள் எல்லாம் தரமான பொருள்களாக அந்தத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் மூலமாக வாங்குவதற்கு முன்பாகவே பார்வையிடப்பட்டு அவைகளுடைய தரங்களை எல்லாம் பரிட்சை செய்து அதற்குப் பின்னாலேதான் வாங்கப்படுகிறது. அப்படி இங்கு ஒன்றும் அங்கு ஒன்றுமாக தரக் குறைவான பொருள்கள் இருக்குமானால் அதை பொதுமக்களுக்கு விநியோகிப்பதை நிறுத்துவது என்று முடிவு செய்து அதன் மூலமாக பொதுமக்களுக்கு நிறுத்தியே வைக்கப்பட்டிருக்கிறது. தனி அதிகாரிகள் மூலமாக அங்கே தவறுகள் நடைபெறுகின்றன என்று சொல்கின்ற குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்வதற்கில்லை. காரணம் அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் இந்த அங்காடியைப் பொறுத்த மட்டிலே எங்களிடம் எதுவும் வரவில்லை. அப்படி உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்து குற்றச்சாட்டுகள் இருக்குமானால் அதை குறிப்பிட்டுத் தெரிவித்தால் இந்த அரசு நிச்சயமாக உரிய நடவடிக்கையை உரிய நேரத்திலே எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 539, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

539—

கோயம்புத்தூர் மாநகராட்சியில் தொலைபேசி வசதியுடன் நடமாடும் மின்சாரப் பிரிவு ஏற்படுத்துதல்.

*16026—திரு. கே. செல்வராஜ் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் தடங்கலைச் சரிசெய்ய கோயம்புத்தூர் மாநகராட்சியில் தொலைபேசி வசதியுடன் நடமாடும் மின்சாரப் பிரிவு ஏற்படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

1994 மே 5]

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மின் தடங்கலைச் சரிசெய்ய கோயம்புத்தூர் மாநகராட்சி மூலம் ஒயர்லெஸ் வசதியுடன நடமாடும் மினசாரப் பிரிவு ரூபாய் 12.5 லட்சம் மதிப்பீட்டில் 1993 டிசம்பர் மாதம் முதல் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு வருகிறது.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவாகள் கூறியதுபோல நான் கேள்வி போட்டு பதில் வருவதற்குள் அந்த கோவை மாநகராட்சியில் ஒயர்லெஸ் கருவியோடு இப்போது 12 வாகனங்கள் மாநகராட்சி முழுவதும் செயல்படுகின்றன. இந்த ஆட்சியில் இரண்டு ஆண்டுக்காலத்தில் என்னுடைய தொகுதியில குறிப்பாக 6 கோடி ரூபாய் திட்டப் பணிகள் சிறப்பாக நடந்து முடிவு பெற்றுள்ளது. இப்போது மீண்டும் 3 கோடி ரூபாய் திட்டப் பணிகள் நடந்து வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த வாரம் இந்த சட்டமன்ற கூட்டத் தொடர் நடக்கின்ற போதும்கூட 60 லட்சம் ரூபாய் திட்டப்பணிகள், கல்வித் துறையைச் சார்ந்த கட்டிடங்களைத் திறந்து வைத்து வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக மாண்புமிகு முதலமைச்சா அவர்களுக்கும் இந்த அரசுக்கும் நன்றியைத் தெரிவித்து நான் கேட்ட கேள்வியானது தொலைபேசி வசதியோடு, கார்ட்லெஸ் டெலிபோனோடு அந்தக் கருவிகள் பொருத்தப்படுமானால் பொதுமக்கள் தொலைபேசியில் தொடர்பு கொள்வதற்கு வசதியாக இருக்கும். அதை நிறுவுவார்களா என்று அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேறற பிறகு மின் தடங்கலை சரி செய்வதற்காக இன்றைக்கு கோவை மாநகராட்சிக்கு என ரூ. 12,00,500 ரூபாய் செலவிலே இன்றைக்கு 30 ஒயர்லெஸ் செட்டுகள் அங்கே பொருத்தப்பட்டிருக்கின்றன. மின் தடங்கலைச் சரி செய்வதற்குத்தான் இந்த வசதி ஏற்பட்டிருக்கிறது. ஒரு டிவிஷனிலே சுமார் ஒரு ஒயர்லெஸ் செட் என்ற வீதம் 24 மணி நேரமும இந்தக் கருவிகள் பயனில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே ஆங்காங்கு இருக்கின்ற பணியாளர்கள் இந்த ஒயர்லெஸ் செட்டின் மூலமாகவே அந்த மின் தடங்கலைச் சரியாகப் பராமரித்து வருகிறார்கள். அந்த மின தடங்கல் உடனடியாக சரி பார்க்கப்பட்டு வருகிறது. ஆகவே தொலைபேசி தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1994 மே 5

முற்பகல் 11-25

திரு. கே. செல்வராஜ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கோவை மாநகராட்சி தன்னிறைவு பெற்ற மாநகராட்சியாக சிறந்த முறையில் விளங்குகிறது என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் மின் தடங்கலைக் குறித்து உடனடியாக பொதுமக்கள் தொடர்பு கொள்வதற்கு, அதாவது இந்த ஒயர்லஸ் கருவிகள், அரசு அதிகாரிகள் தாங்கள் தொடர்பு கொள்வதற்கு வசதியாக இருக்கிறதே யொழிய, தொலைபேசி வசதி அதிகமாக இருக்கின்றபோது தான் பொதுமக்கள் அவர்களோடு தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியும். அதற்காகத்தான் இந்தத் தொலைபேசிகளை ஒவ்வொரு டிவிஷன் அலுவலகத்திலும் வைத்தோம். இப்பொழுது குடிநீர்ப் பிரச்சினையிலும் மின் தடங்கலிலும் சரி செய்வதற்கும், உடனுக்குடன் அந்தத் தடைகளை நீக்குவதற்கும், அதிகாரிகள் சிறந்த முறையில் செயல் படுகிறார்கள். அதை நான் குற்றம் சொல்லவில்லை, குறையும் சொல்லவில்லை, இந்த ஒயர்லஸ் கருவியோடு தொலை பேசியும் இருக்கின்றபொழுது பொதுமக்கள் தொடர்புகொள்ள வசதியாக இருக்கும். அதை மாண்புமிகு அமைச்சர் கவனித்து ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல, தொலைபேசித் தொடர்பை மூவிங் வெகிக்கிள் என்று சொல்லக்கூடிய, சென்றுகொண்டிருக்கின்ற வாகனங்களில் வைக்க முடியாது. அந்த அடிப்படையிலே தான் இன்றைக்கு 13 டிவிஷன்களாகப் பிரிக்கப்பட்டு இன்றைக்கு மொபைல் வேன் என்று சொல்லக்கூடிய அந்த ஊர்திகளிலே பொருத்தப்பட்டிருக்கிறது. இந்த அமைப்பு இன்றைக்கு கோவை மாநகராட்சியிலே மின் தடங்கலைப் போக்குவதற்காக சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதிலே ஏதாவது எதிர் காலத்திலே பிரச்சினை இருக்கும் என்று சொன்னால் நிச்சயமாக மாநகராட்சி அதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 540, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.